# தூதன்

தூதன்-24 | நவம்பர் 2015 | தூது-10

"உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம்பண்ணு."
நீதிமொழிகள் 3:9



## தென் இந்தியத் திருச்சபை
## தமிழ் சபை - துபாய்

Private Circulation only

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 03 |
| உதவி போதகர் மடல் | 06 |
| உதவி ஆயரம்மா மடல் | 08 |
| செயலர் மடல் | 10 |
| ஒரு பொய்யின் விலை இரு உயிர்கள் | 12 |
| நீங்கள் கிறிஸ்தவரா... | 13 |
| கிறிஸ்துவே நம்மில் உயர்த்தப்படட்டும் | 14 |
| ஆராதனை பாடல்கள் | 15 |
| திருச்சபை ஜெபநாள் | 16 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 18 |
| தெரிந்து கொள்வோம் | 20 |
| வேதவினா போட்டி | 22 |
| Health Tips | 24 |
| Birthday Celebrants | 27 |
| Wedding Anniversary Celebrants | 30 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2824696, Fax: 04-2826162, Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com, E-mail: csitapar@emirates.net.ae

## பண்டிகைகளும் நன்றியும்

கிறிஸ்துவுக்குள் பேரன்புடையீர்,

போற்றுதற்கும், வணங்குதற்குமுரிய ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் திருப்பெயரில் நல்வாழ்த்துக்கள். "திருவிழா" என்றாலே கொண்டாட்டம், மகிழ்ச்சி, அன்பு, ஒற்றுமை என்று அடுக்கிக்கொண்டே போகலாம். பண்டிகைகளைக் கொண்டாடாத மனிதரே இல்லை. ஆனால் எதற்காகக் கொண்டாடுகிறோம் என்பதைக்கூட அறியாமல் பலவேளைகளில் கொண்டாடுகின்றோம். திருச்சபை - கொண்டாடும் ஒரு சமுதாயம், கொண்டாட அழைக்கும் இறைவனின் திருக்கூட்டம், திருமறையும் கொண்டாட்டங்களின் நூல் (Church is a celebrating community and Bible is the book of festivity).

அடிப்படையிலே இரண்டு பருவ காலங்களில் எபிரெயர்கள் தம் விழாக்களைக் கொண்டாடினர். பொருளுள்ள வகையில் அவர்கள் இறைவனுக்கும் மனுக்குலத்திற்கும் இடையேயான உறவை, உடன்படிக்கையை உறுதிசெய்தனர்.

### 1. வசந்தகால விழாக்கள் (Spring Festivals) :

I) பஸ்கா (Passover) - PESACH
ii) புளிப்பற்ற அப்பவிழா (Unleavened Bread) - CHAG HAMATZOT
iii) முதற்கனி (First Fruits) - HABIKKURIM
iv) பெந்தெகொஸ்தே (Pentecost) - SHAVOUT (அ)
50-ம் நாள் விழா (50th Day Celebration)

### 2. இலையுதிர்கால விழாக்கள் (Fall Festivals)

i) எக்காளம் / பூரிகைப் பண்டிகை (Trumpet Festival)
ROSH HASHANAH
ii) நிறைவேறுதல் பண்டிகை (Atonement) - YOM KIPPUR
iii) கூடாரப் பண்டிகை (Tabernacle) - SUKKOTH

இவ்வேழு பண்டிகைகளும் அன்று பாலசுதீன நாட்டிலே மட்டுமல்ல, இன்றும் உலகமெங்கும் யூதர்களால் கொண்டாடப்பட்டு வருகின்றன. இவைகளின் நாயகர் இறைவனே. நன்றி செலுத்தும் முகத்தான் இவைகள் கொண்டாடப்படுகின்றன. (All seven festivals are Thanksgiving to God, The creator, Protector and Sustainer of life).

பஸ்கா பண்டிகையும் (liberation), புளிப்பில்லாத அப்பப்பண்டிகையும் (Rememberance) இணைந்து ஒரே பண்டிகையாகப் பின்னர் கொண்டாடப்பட்டது. நாம் கொண்டாடும் ஸ்தோத்திரப் பண்டிகையின் துவக்கம், "ஏழு வாரங்களின் பண்டிகை" (Festival of weeks) எனப்படும் பெந்தேகொஸ்தேயையும், விளைச்சலில் முதற்பலனை ஆண்டவருக்குப் படைக்கும் (First Fruits) முதற்கனிப் பண்டிகையையும் இணைத்துச் செய்யப்படுவதாகும் (உபாகமம் 16:9-17, 26:1-19).

God Gives and Forgives

Man Gets and Forgets

என்றில்லாதபடி கர்த்தர் நமக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், இரட்சிப்பின் கிண்ணத்தை ஏந்தி அவரைத் தொழுவோம். பொருத்தனைகளை நிறைவேற்றுவோம், நன்றிகளை ஏறெடுப்போம். (சங்கீதம் 116:11-14).

இறைப்பணியில் ஆயர்
அருள்திரு.S.கிறிஸ்தோபர் ரத்தினசாமி.

# ஆயரம்மா மடல்

## பெயர் தெரியாத பக்திப்பெண் - திருமதி. நோவா

அன்பான இறைமக்களே,

தந்தையைப்போல நம்மை நடத்துகின்ற, தாயைப்போல அரவணைக்கின்ற, போஷிக்கின்ற, சொந்தம் பாராட்டுகின்ற, தூய ஆவியராக இன்றளவும் நம்மைக் கரம்பிடித்து, உணர்த்தி வரும் திரியேகக் கடவுளின் நாமத்தில் புதிய மாத நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த புதிய மாதத்திலும் கர்த்தரே நம்மை நடத்தப்போகிறார். கடந்த நாட்களில் நம் ஜெபத்தின் மூலமாக அனேகரை சுகப்படுத்தி, திடப்படுத்தி, அதிசயங்களினாலும், அற்புதங்களினாலும் நடத்தி வந்திருக்கிறார். பிள்ளைகள் வாழ்வில் நல்ல சுகம், பெலன், ஜீவனையும், ஞானத்தையும் கொடுத்திருக்கிறார். பெற்றோர்கள் கை பெலனைச் சாப்பிடும்படியாய் உழைப்பை ஆசீர்வதித்திருக்கிறார். வயது முதிர்ந்தோரை தள்ளிவிடாமல் காத்து நடத்தி இருக்கிறார். அப்படிப்பட்ட ஆண்டவரை ஸ்தோத்தரிப்போம். அல்லேலுயா.

இந்த மாதத்திலும் "பெயர் தெரியாத பெண் விசுவாசி" ஒருவரை அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறேன். கடவுள் ஆண்களோடு மாத்திரம் உடன்படிக்கை செய்யவில்லை; மாறாக பெண்களோடும், பிள்ளைகளோடும் உடன்படிக்கை செய்கிறவர். இணைத்து வைக்கிறவர், குடும்பங்களைக் கட்டி எழுப்புகிறவர், தலைமுறையின் ஆசீர்வாதங்களைக் கொடுத்து தொடர்ந்து வாழ வைக்கிறவர். இன்றைய சூழலில் பெண்களை Mrs. So and so என ஆண் பெயரிலேயே குறிப்பிடுகிறோம். திருமறையிலும் ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான், ஈசாக்கு யாக்கோபைப் பெற்றான், யாக்கோபு யோசேப்பைப் பெற்றான், நோவா சேம், காத், யாப்பேத் என்னும் மூன்று குமாரரைப் பெற்றான் (ஆதி.6:10) என்று இருக்கிறது. ஆனால் பிள்ளையை கடவுளுடைய கற்பனைகளில் வளர்க்கின்ற, உருவாக்குகின்ற தாயின் பெயர் பதிவு செய்யப்படுவதில்லை.

அப்படித்தான் கடவுள் நோவாவுடன் செய்த உடன்படிக்கையை நினைவுகூறுகிறோம். ஆனால் அதற்குப் பின்னர் இருக்கிற Mrs.நோவாவை மறந்து போகிறோம். திருமதி நோவாவோடும் கடவுள் உடன்படிக்கை செய்கிறார். முழு குடும்பத்தோடு உடன்படிக்கை செய்கிறார். ஜோடி ஜோடியாக பறவைகளோடும், மிருகங்களோடும் உடன்படிக்கை செய்கிறார்.

ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் பெண் நிச்சயமாகவே இருக்கிறாள். வரலாற்றில் இடம்பெற்ற இந்த முக்கியமான நிகழ்ச்சிக்குப் பின்னர் உள்ள நோவாவின் மனைவி பெயர் குறிப்பிடப்படவில்லை. கடவுள் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைக்கிறார். It's an identity and an honour for any human being to be called by name. ஆனால் பெயர் குறிப்பிடப்படாத நோவாவின் மனைவியின் பங்கு, ஆண்டவரின் மீட்புத்திட்டத்தில் உடன்படிக்கைக்குக் கீழ்ப்படிவதில், போஷிக்கும் பணியில், காப்பாற்றுகின்ற பணியில், கற்பனையின்படி நடப்பதில், பிள்ளைகளையும், மருமகள்களையும் விசுவாசத்தில் நடத்துவதில் மெச்சத் தக்கது. மொத்தத்தில் மூன்று பரிமாணங்களில் இவ்விசுவாசப்பெண்ணின் பண்புகள் வெளிப்படுகின்றன.

1. கணவருடன் குடும்பத்தைக் கட்டினவள் (ஆதி.6:9,10)
2. கர்த்தருக்குக் கீழ்படிந்தவள் (ஆதி. 6:18)
3. கறைபடாமல் வாழ்ந்ததால் காப்பாற்றப்பட்டவள் (ஆதி.7:13)

அவரைப்போல பெண்களாகிய நாமும் நம் குடும்பத்துடன் இறைவனுக்குமுன் சாட்சியாக வாழ்ந்து, பிள்ளைகளை இறைபக்தியிலே வளர்த்து, இறையரசைக் கட்டி எழுப்புவோம். கடவுள் தாமே நமக்கு பெலன் கொடுப்பாராக. ஆமென்.

திருமதி. தீபா கிறிஸ்தோபர்.

ஆயரம்மா, பெண்கள் ஐக்கிய சங்கத் தலைவி.

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்

## ஸ்தோத்திரப் பண்டிகை 2015

"என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களை யெல்லாம் பண்டகசாலையிலே கொண்டுவாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்க மாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." மல்கியா 3:10

நாள் : வெள்ளிக்கிழமை 20-11-2015
இடம் : பரிசுத்த திருத்துவ ஆலய வளாகம்
நேரம் : காலை 7.30 மணி முதல் நண்பகல் 1.30 மணி வரை

## நிகழ்வு முறைமை

காலை 07.30 மணி : ஸ்தோத்திரப் பண்டிகை ஆராதனை
காலை 08.30 மணி : ஸ்டால்கள் திறப்பு விழா, விற்பனை
காலை 10.00 மணி : ஏல விற்பனை
நண்பகல் 01.30 மணி : ஸ்தோத்திரப் பண்டிகை நிறைவு ஜெபம்,ஆசீர்வாதம்

உணவு ஸ்டால்கள்: காலை சிற்றுண்டி, இனிப்பு, காரங்கள், காப்பி, தேனீர், குளிர்பான ஸ்டால்கள், பிரியாணி மற்றும் இதர ஸ்டால்கள்.

**ஊக்கமாய் ஜெபியுங்கள்!**
**மனப்பூர்வமாய் காணிக்கை கொடுங்கள்!!**
**உற்சாகமாய் பங்கு பெறுங்கள்!!!**

**கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக!**

# உதவி போதகர் மடல்

அநாதியாய் என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்படத்தக்கவராகிய கடவுளின் திருப்பெயரில் தூதன் வாசகர்கள் அனைவரையும் மனமகிழ்ந்து வாழ்த்துகிறேன். இவ்வருடத்தின் 10 மாதங்களிலும் நம்முடனிருந்து நேர்த்தியாய் வழிநடத்தினவர் நவம்பர் மாதத்திலும் நன்மைகளினால் நம்மை நிறைத்திடுவாராக.

## திருமறை ஆய்வு - ரோமர் 12-ஆம் அதிகாரம்
## புத்தியுள்ள ஆராதனை

காலச்சூழல்களில் மாற்றம், கலாச்சாரங்களில் மாற்றம், கல்வி முறைகளில் மாற்றம், கண்டுபிடிப்புகளில் மாற்றம் என அன்றாடம் பல்வேறு மாற்றங்களைச் சந்தித்து வரும் மனுக்குலம், ஆன்மீகத்திலும் மாற்றம் காணுதல் சிந்திக்கத்தக்கது. குறிப்பாக, ஒவ்வொரு திருச்சபை பிரிவுகளுக்கும் இடையே இருக்கின்ற ஆராதனை முறைமைகளில் எது சிறப்பானது? எனத் தேடித்திரியும் கிறிஸ்தவ விசுவாச வீட்டாரை நம்முன்னே நிறுத்திப்பார்த்தல் சிறந்தது. ஏன் ஆலயம்? எதற்காக ஆராதனை? ஆராதனையால் விளைகின்ற பலன் என்ன? என்னும் அடிப்படைக் கேள்விகளுக்கே பதில் தெரியாமல், விசுவாசக் குடும்பங்கள் காணப்படுதலே, திருச்சபையின் பல்வேறு கருத்து வேறுபாடுகளுக்குக் காரணம் என்பதை நன்கு உணர முடிகின்றது. மேற்காணும் கேள்விகளுக்கு யோவான் 4:19-30 வரையுள்ள வசனங்கள் சிறப்பான பதில்களைத் தருகின்றன. இந்நிலையில் “புத்தியுள்ள ஆராதனை”யில் பங்கேற்க சகோதரரே.... என அழைத்து அனைவருக்கும் வேண்டுகோள் விடுகின்றார்.

### i) உடலைத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள் (ரோமர் 12:1)

நமது உடலையும் அதன் உறுப்புகளையும் தேவனுக்கு அர்ப்பணிக்காமல் தேவனைச் சேவிப்பது என்பது கூடாத காரியம். “உங்கள் உடலானது நீங்கள் தேவனாலே பெற்றும், உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே, ஆகையால், தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் உடலினாலும், ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்” என 1 கொரிந்தியர் 6:19,20-ல் சொல்லப்பட்டுள்ளதைக் கவனத்தில் கொள்வோம். மாம்சமும், இரத்தமும், எலும்புகளும், நரம்புகளும் இணைந்த உடல் பரிசுத்த ஆவியானவரின் தங்குமிடம் என்பது எத்தனை ஆச்சரியம்! இங்கே அப். பவுல் மனிதவுடலுக்கும், ஆராதனைக்குமிடையே இருக்கின்ற நெருக்கமான தொடர்பை முக்கியப்படுத்துகிறார்.

“அக்கிரமத்தை நடப்பிக்குமுன்னே நீங்கள் உங்கள் உறுப்புக்களை அசுத்தத்திற்கும், அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்தது போல இப்பொழுது, பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் உறுப்புக்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள்” (ரோமர் 6:19) என்னும் பவுலாரின் அறைகூவலுக்குக் கீழ்ப்படிவோம். ஆண்டவரே, நீர் எனக்குத் தந்திருக்கும் உடலின் உறுப்புகள் உயிருள்ள நாளெல்லாம் உமக்கு விருப்பமில்லாத எதையும் செய்யாதபடி உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன் என்னும் அர்ப்பண ஜெபத்துடன் தினமும் முன்னேறுதல் புத்தியுள்ள ஆராதனைக்கு நேராக நம்மை வழிநடத்தும்.

### ii) உள்ளத்தில் உருவாகும் புதிய மாற்றம் பெறுங்கள் (ரோமர் 12:2)

உலகம் நிரந்தரமற்றது போல நாமும் நிலையற்றவர்கள். ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனிதருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. "கடவுள் ஒருவரே அழிவில்லாதவர்" என்பதை நினைவில் கொள்வோமாக. யோவான் 15:19-இல் "நீங்கள் உலகத்தாராயிருந்தால் உலகம் தன்னுடையதை சிநேகித்திருக்கும். நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்தில் இருந்து தெரிந்து கொண்டபடியினாலும் உலகம் உங்களைப் பகைக்கிறது" எனவும், யாக்கோபு 4:4-இல் "உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால், உலகத்துக்கு சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாயிருக்கிறான்" எனவும் குறிப்பிடப்பட்டுள்ள வசனங்களை அப். பவுல் கருத்தில்கொண்டு உலக விருப்பத்தையும், தேவ விருப்பத்தையும் வேறுபிரித்து, உள்ளத்தில் மாற்றம் கொள்ளுங்கள் என ஆலோசனை வழங்குகிறார். யோவான் 5:30-இல் "நான் என் சுயமாய் ஒன்றும் செய்கிறதில்லை. எனக்குச் சித்தமானதை நான் தேடாமல் என்னை அனுப்பின பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது" என இயேசுவைப்போல தேவசித்தம் செய்வதையே நம் வாழ்வில் குறிக்கோளாகக் கொள்ளுதல் ஏற்புடையது. "ஆண்டவரே! நான் என்னச் செய்ய சித்தமாயிருக்கிறீர்?" (அப். 9:6) என்று கேள்வி கேட்டதோடு நிறுத்தாமல் சொல்லப்பட்டப் பதிலை தேவசித்தமாய் ஏற்று செயல்பட்டது அப். பவுலின் மகிமை நிறைவாழ்வுக்கு அடிப்படையாயிற்று.

### iii) உண்மையான அன்புடன் செயல்படுங்கள்

ரோமர் 12:3-18 வரையிலும் கூறப்பட்டுள்ள பவுலடியாரின் எழுத்துக்கள் இக்கருத்தினை ஆமோதிக்கிறது. தோற்றத்தில் பலராக வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றித்திடவும், வெவ்வேறு ஆன்மீக வரங்களைப் பெற்றுள்ள நாம், நமக்குத் தரப்பட்ட வரத்தை அடையாளம் கண்டு, வரத்தைப் புதைத்து வைக்காமல் அதே சமயம் வரம்பு மீறாமல் பயன்படுத்தவும் அப். பவுல் போதிக்கிறார். ஆலயத்தினுள்ளே நாம் செய்கின்ற ஆராதனை பொருள் நிறைந்ததாக வேண்டுமெனில், வாழும் இடத்தில் உடன் மனிதர்களோடு உண்மையான அன்புடன் செயல்பட வேண்டுமென்பதை மிக அழுத்தமாக, நீண்ட பட்டியல் வழியாக (வ. 9-18) குறிப்பிட்டுள்ளார்.

இரத்த ஓட்டத்தில் துளியளவும் அன்பின்றி கை குலுக்குவதும், கரம் குவித்துத் தோத்திரம் சொல்லுவதும், கண்டதும் கட்டித்தழுவி வாழ்த்தினைப் பரிமாறுவதும் மாய்மாலமானது. உண்மையான அன்பு இல்லாமையால் இல்லற வாழ்வில் தம்பதியர் நடுவே எங்ஙனம் உடைவு ஏற்படுகிறதோ அதுபோல சபை வாழ்வில் விசுவாசிகள் நடுவில் பிரிவு ஏற்படுவதும் சாத்தியமே.

அன்பானவர்களே! "புத்தியுள்ள ஆராதனை" என்பதை வாரத்தில் ஒருநாள் ஆலயத்தின் சுவர்களுக்குள் நடைபெறும் நிகழ்வாகக் கருதாமல், அன்றாடம் வாழ்வில் நிகழுகின்ற தொடர் செயலாக நினைத்து கடவுளை ஆராதிப்போம். உடலாலும், உள்ளத்தாலும், உண்மையான அன்பாலும் தேவசித்தத்தை நிறைவேற்ற கடவுள் நம்மனைவருக்கும் கிருபை பாராட்டுவாராக. ஆமென்.

இறைப்பணியில் உங்களுடன்,
அருட்திரு. V. சாமுவேல் ஜெபராஜ்.

# உதவி ஆயரம்மா மடல்

சிறு பிள்ளைகளை அதிகமாய் நேசிக்கிற இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அனைவருக்கும் வணக்கம்.

**சிந்தனைக்கு ஓர் சிறு நிகழ்வு**

அம்மா! அம்மா! என்று அலறினான் செல்வம்.
ஏண்டா உடச்ச பானைய? என்று சொல்லிக் கொண்டே காதை பிடித்துத் திருகி அவன் முகத்தில் அறைந்தாள் அவன் சித்தி.

சிங்காரம்...! ஏ புள்ள.... ஏண்டி அவனை அடிச்சி கொல்ற? எப்படி கையில் இன்னைக்கு மாட்டிக்கின்னான் என்று உள்ளே கேட்டுக் கொண்டே வந்தான் வேலை முடிந்து திரும்பிய மாணிக்கம்.

இந்த பாரு, தண்ணி எடுத்துக்கிட்டு வாடான்னு அனுப்பினேன். வரிசையில் இம்புட்டு நேரம் நின்னு, சண்டை போட்டு பானையையும் உடைச்சிப்புட்டு திருதிருன்னு முளிச்சிகிட்டு வந்து நிக்குது. தண்ணி இல்லாத நேரத்திலே நம்ம என்ன பண்றது? குடிக்கக்கூட இன்னைக்கு தண்ணியில்ல. இந்த வெயில் நேரம், என்னமோ அதிசயமா என் கையில் மாட்டிக்கிட்டான்.

ஏண்டா இந்த அநியாயம் பண்ற, பள்ளிக்கூடம் அனுப்பினா சரியா படிக்காம வந்துபுட்ட. ஏதோ ஒரு தொழில் கத்துக்க ஒரு மெக்கானிக்கு கிட்ட விட்டா அவன் தலையிலேயே இரும்ப தூக்கி போட்டுபுட்ட! உன்ன என்னடா பண்றது? என்று சொல்லி கூட நாலு அடி வைத்தான் மாணிக்கம்.
அந்த வாத்தியாரு சொன்னாப்போல நாளைக்கு இவனை பக்கத்து ஊரு தச்சுப்பட்டறையில சேர்த்துப்புட்டு வந்துடுறேன்.

செல்வம் தன் சிறுவயதிலேயே தன் தாயை இழந்தவன். சித்தியின் சீற்றமும், தகப்பன் அளிக்கும் தண்டனையும் அவனை ஒரு முரடனாக்கி விட்டது. அன்பு காட்டுவார் யாருமின்றி எதிலும் ஒரு ஈடுபாடு இல்லாம பன்னிரண்டு வயதிலேயே ஊரில் ரௌடி என்ற பட்டமும் பெற்றான்.

அடுத்த நாள் ஒரு பையில் சில துணியுடன் தச்சுப்பட்டறைக்கு தந்தையுடன் செல்வம் புறப்பட்டான். விடுதிக்காப்பாளரிடம் "முரட்டுப்பயலுங்க, கொஞ்சம் கவனிச்சிக்கிங்க" என்று சொல்லிவிட்டு வந்தார் தந்தை. அதைக்கேட்ட சில வாலுப் பையன்கள் முரடா என்று கூப்பிட ஆரம்பித்தனர். சில நாட்கள் அமைதியாக இருந்தாலும், பின் தன்னை கேலி செய்தவரை அடிக்கவும், குத்தவும் ஆரம்பித்தான் செல்வம். அதற்கு தண்டனையும் பெற்றான்.

ஞாயிறு வந்தது. வரிசையாக ஆலயம் சென்றனர் விடுதி மாணவர்கள். ஆராதனை முடித்து ஓய்வுநாள் பள்ளிக்குப் பிரிந்து சென்றனர். செல்வம் இருந்த வகுப்பிற்கு ஆசிரியை மல்லிகா வந்தார். புதுப்பையன் செல்வத்தை, மல்லிகா அருகில் அழைத்து விசாரித்தார்.

டீச்சர் அவன் ஒரு சரியான முரடன் என்றான் லாசரு. அவன் அப்பாவே அப்படி சொல்லிட்டுப் போனாரு என்றான் அடுத்த பையன் பால்.

ஆசிரியர் அவர்களை அதட்டி, இல்லை இவன் நல்ல பையன் என்று சொல்லி அன்புடன் அவனிடம் பேசி முதுகில் தட்டிக் கொடுத்தார்.

தன்னிடம் யாரும் அன்புடன் பேசினதையும், தன்னை நல்ல பையன் என்று யாரும் சொன்னதையும் தன் வாழ்க்கையில் கண்டறியாத செல்வத்தின் உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சி ஊடுருவிப் பாய்ந்தது. அன்று மல்லிகா அக்கா பாடமாக எடுத்த மலைப்பிரசங்கம் ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தை திருப்பிக் கொடு என்பது, அன்று அவனுக்கு அர்த்தமுள்ளதாக தெரிந்தது.

வாரங்கள் ஓடின. மாதங்கள் மறைந்தன. செல்வம் ஒவ்வொரு வாரமும் ஓய்வுநாளுக்காக காத்திருந்தான். மல்லிகா அக்காவின் போதனைகள் பல கேட்டான். அவர் அன்பையும் ருசித்தான். அவன் வாழ்க்கையில் ஒரு மாற்றம் துவங்கியது. வெற்றியின் பாதையில் திரும்பினான். செல்வம் மனதில் பல புது தீர்மானங்கள் செய்தான். அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. அவனுக்கே தன்னை நம்ப முடியவில்லை.

ஒருநாள் பட்டறையில் இரு பையன்கள் விளையாட்டாக கட்டையை எறிய, அது தவறி அங்கு ஒருவருக்காகச் செய்யப்பட்டிருந்த மேஜையின்மேல் விழுந்து கண்ணாடி உடைந்தது. செல்வம் அங்கு உட்கார்ந்து ஒரு நாற்காலியை சரிப்படுத்திக்கொண்டிருந்தான். அந்த இரு பையன்களும் ஏதோ பேசி விடுதிகாப்பாளரிடம் ஓடி, சார், சார், செல்வம் மேஜை கண்ணாடியை உடைத்துவிட்டான் என்றார்கள்.

பாவம் ஒரு பக்கமும், பழி ஒரு பக்கமும் என்பதை அறியாத செல்வம் கண்ணாடித் துண்டுகளை ஓரமாக தள்ளிக்கொண்டிருந்தான். கோபமாக வந்த விடுதிகாப்பாளர் செல்வம் கன்னத்தில் பளார்.... பளார் ...” என்று அறைந்தார். சார் நான் தவறு ஒன்றும் செய்யவில்லை, நான் இதை உடைக்கவும் இல்லை என்றான் செல்வம். உண்மையை ஒத்துக்கொள்ளும் வரை இங்கே இரு என்று ஒரு அறையில் தள்ளி கதவைப் பூட்டிவிட்டார். உரிமையாளரிடமும் போய் சொல்லிவிட்டார்.

செல்வம் படிப்படியாகத் திருந்திவருவதை கண்டு, கவனித்து வந்த உரிமையாளர், சிறிது நேரம் சென்று செல்வத்தை பார்க்க அந்த அறைப்பக்கம் வந்தார். உள்ளே பேசும் சப்தம் கேட்டது. அறை பூட்டி இருக்கிறது. யாரிடம் பேசுகிறான் என்று ஜன்னல் வழியாக சப்தமின்றி மெதுவாக கவனித்தார்.

மேஜை மேல் மல்லிகா அக்காவின் படம். எதிரே செல்வம் கண்ணீருடன், அக்கா உங்களால் மிருகமாக இருந்த நான் மனிதன் ஆனேன். அந்த பையன்கள் இரண்டு பேரும் உடைத்துவிட்டு, என்மேல் பழிபோட்டு விட்டார்கள் அக்கா. உங்கள் அன்பையும், உங்கள் போதனையையும் அறியாத காலமாக இருந்தால், அந்த வாத்தியார் என்னை அடித்ததற்கு என் கையிலிருந்த சுத்தி அவர் தலையை பதம் பார்த்திருக்கும். இப்போ, பொறுமையை தந்த கடவுளுக்கு நன்றி.

ஆசீர்... என்று விடுதிகாப்பாளரை அழைத்தார் உரிமையாளர். செல்வத்தை திறந்து வெளியே விடுங்கள். சார்.....அவன்..... என்று இழுத்தார். உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடியுங்கள், செல்வம் குற்றவாளி அல்ல என்றார் உரிமையாளர்.

**சிந்தனைக்கு :** “இந்தச் சிறியரில் ஒருவராகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல” (மத்தேயு 18:14)

உங்களுக்காக ஜெபிக்கும்,
திருமதி. செலின் சாமுவேல்,
உதவி ஆயரம்மா.

# செயலர் மடல்

கர்த்தரின் பெரிதான கிருபையால் மீண்டும் ஒரு புதிய மாதத்திற்குள் பிரவேசிக்கச் செய்த கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன்.

வேத ஆராய்ச்சி வகுப்புகள் ஒவ்வொரு முதலாம், மூன்றாம் மற்றும் ஐந்தாம் புதன் கிழமைகளில் நடைபெற்று வருகிறது. இந்த வகுப்புகள், சபை மக்கள் தங்கள் ஆவிக்குரிய வளர்ச்சியில் மென்மேலும் வளர மிகவும் உதவியாய் இருக்கின்றன. இன்னும் அனேகர் வந்து கலந்து பயன்பெற அழைக்கப்படுகிறீர்கள்.

இராஸ் அல் கைமா கிளைச்சபையின் ஸ்தோத்திரப் பண்டிகை 09-10-2015 அன்று மிக நேர்த்தியாக நடந்தேறியது. சுமார் 1 லட்சம் திராம்ஸ் காணிக்கை சேகரிக்கப்பட்டது. இதற்கு ஜெபித்த மற்றும் பங்குகொண்டு உற்சாகமாக காணிக்கைகள் கொடுத்த சபைமக்கள் யாவருக்கும் நன்றி கூறிக்கொள்கிறோம்.

23-10-2015 அன்று வாலிபர் ஐக்கிய சங்கத்தினர், ஆலய வழிபாட்டை நேர்த்தியாக நடத்தித் தந்தார்கள். அவர்கள் சபை ஊழியங்கள் பலவற்றிலும் பங்கு பெறுவது குறித்து மிகவும் சந்தோஷம். சபை வாலிபர்களுக்கு கர்நாடக இசைப்பாடலை பயிற்றுவித்த ஆயர் அவர்களுக்கு நன்றி கூறுகிறோம். தனது வேலைகளின் மத்தியிலும் இசைப்பயிற்சி கொடுத்த Choir Master Mr.Ranjith அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறோம். Youth Fellowship பொறுப்பாளர்கள் திருமதி.பிரியாசிங், திருமதி.இனிதா மோசஸ் அவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறோம்.

Rev.Stephen ஐயா அவர்களுக்கு Rs.5,00,000/- அனுப்பப்பட்டுள்ளது. நமது கொளகூர் Missionary Medical ஊழியத்திற்கு(DMPB) Rs.3,00,000/- அனுப்பப்பட்டுள்ளது.

இந்த மாதம் நடக்கவிருக்கும் Convention கூட்டத்தில் Dr.புஷ்பராஜ் அவர்கள் இறைசெய்தி அளித்து நம்மை ஆவிக்குரிய வளர்ச்சியில் நடத்துவார்கள். ஜெபியுங்கள், பங்குபெறுங்கள். புதிதாக தேர்வு செய்யப்பட்ட கமிட்டி அங்கத்தினர் Mr.Julian மற்றும் புதிய பொருளாளராக தேர்வு செய்யப்பட்ட Mr.Andrus இருவரையும் ஆயர் அவர்கள் ஜெபித்து dedicate செய்தார்கள்.

திரு.Hemanth Kumar அவர்கள் Harvest Festival Convenor ஆக நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர் சபைமக்களை அணுகும்போது உற்சாகமாக Sponsorship அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

Harvest Festival முன்னிட்டு Weekly Food Sales கர்த்தரின் பெரிதான கிருபையால் மிகவும் சிறப்பாக நடந்து வருகிறது. இதில் பங்குபெறும் Prayer Cell அங்கத்தினர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறோம். தொடர்ந்து வரும் 20-11-2015 அன்று நடக்கவிருக்கும் Harvest Festival பண்டிகையிலும் அநேக பொருட்கள், உணவுப்பொருட்கள் முதலியன படைத்து சிறப்பித்து தருமாறு கேட்டுக்கொள்கிறோம். Harvest Festival Food Coordinator ஆக ஆயரம்மாவுடன் Mrs.Irene Jayaseelan அவர்கள் இணைந்து செயல்படுவார்கள். Mrs.Gold Sheeba Sigamoni -ம் Mrs.Initha Moses-ம் அவர்களுக்கு உதவியாக இணைந்து செயல்படுவார்கள். இவர்கள் உங்களை அணுகும்போது உற்சாகமாய் உங்கள் ஒத்துழைப்பை கொடுத்து சிறப்பாக நடக்க உதவி செய்யுங்கள்.

Inter Church Foot Ball Competition வரும் 28-11-2015 அன்று நடக்கவுள்ளது.பெற்றோர் தங்கள் பிள்ளைகளை சரியான நேரத்திற்கு பயிற்சிக்கு அழைத்து வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். பிள்ளைகள் வெற்றி பெறவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

30-10-2015 அன்று Junior Church பிள்ளைகள் ஆலய வழிபாட்டை நேர்த்தியாக நடத்தித் தந்தமைக்கு நன்றி கூறிக்கொள்கிறோம். பயிற்றுவித்த பொறுப்பாளர் மற்றும் ஆசிரியர்களுக்கு நன்றி.

சிங் ரெத்னம், செயலர்.

## NEW MEMBERS LIST

| S. No. | NAME | MEM. NO. | AREA |
|---|---|---|---|
| 1 | Mr. Rahul Raja | 2539 | Dubai |
| 2 | Mr. Havin Heba | 2540 | Dubai |
| 3 | Mr. Kitson Davidson Mony | 2541 | Dubai |
| 4 | Mr. G.Jairin Gift | 2542 | Dubai |
| 5 | Mr. Weslin G.Stephen | 2543 | Dubai |
| 6 | Mr. S. Jaya Singh | 2544 | Dubai |
| 7 | Mr. N.Selvin Dany | 2545 | Dubai |
| 8 | Mr. J.P.David Rajan | 2546 | Dubai |
| 9 | Miss Shalini Christabel | 2547 | Dubai |
| 10 | Mr. K.Peter Rathnakumar | 2548 | Dubai |
| 11 | Mr. Baburaj Thomas | 2549 | Dubai |
| 12 | Dr. Prem James Charles | 2550 | Dubai |
| 13 | Mr. Stalin Jose | 2551 | Dubai |
| 14 | Mr. Ralbin Jose | 2552 | Dubai |

# ஒரு பொய்யின் விலை இரு உயிர்கள்

பொய்சொன்னான் செத்துப்போனான்
பொல்லாப்பேதும் செய்யவில்லை
மெய்பக்தன் மெய்தான்பேர்
சிறியதோர் சபலத்தால்
ஒத்துப்போன குற்றத்துக்காய்
குற்றமற்ற வாழ்க்கைத்துணையும்
செத்துவிழுந்தாள் மாலைமலராய்
மண்ணுக்கே உரமானார்
பரமேறிய இயேசுவால்
உரமேறிய சீடர்களின்
திறன்கண்ட விசுவாசிகள்
ஒருமனப்பட்டு திரண்டார்கள்
தமக்குடையதை எமக்குடையது
என்றெவரும் சொல்லவில்லை
தன்மனம்போல் மண்மனைகளை
பொதுவுடைமை யாக்கிவைத்தார்
முதல்நூற்றாண்டின் முதற்பாதிக்குமுன்
முழுவிசுவாசக் கூட்டத்தாரே
முதல்முதலாய்ப் பொதுவுடைமை
கொள்கையினை தொடங்கிவைத்தார்
உடைமைகளை விற்றெடுத்து
கொடுத்துவிடல் கடமையென்று
தொடங்கிவிட்டார், விற்றதொகை
பேதுரு,அப்போஸ்தலர் பாதத்தில்
அனனியா சப்பீராள்
தம்பதியர் நிலத்தைவிற்று
தன்மனைவியும் அறிய,பாதியை
மட்டும்,பேதுரு பாதம்வைத்தான்
உணர்ந்துகொண்ட தேவமனிதன்
பாதிப்பணம் மறைத்துவைத்த
குணங்கெட்டநிலை சொல்லிவிட்டான்
கேட்டஅனனியா பொய்யால்செத்தான்
கணவன்நிலைமை அறியாமனைவி
சப்பீராள் பேதுருவைப்பாத்தாள்
கணவனைப்போல் மறைத்திட்டாள்
இவள்கதையும் முடிந்துபோச்சு.

ஆதாரம்
அப்போஸ்தலர் 5:1–11
கவிதை எண் : 181
கவிதை ஆக்கம் : மணிமுத்து

# நீங்கள் கிறிஸ்தவரா...

சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன்.என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக. யோவான் 14:27.

உலகில் பல
மாற்றம் வரும்
விஞ்ஞானம்
விண்ணைத் தொடும்
எட்டுவோம்
சந்திரனில் - அங்கே
கட்டுவோம் வீடு
என்பது செய்தி.
அறிவார்ந்த மனித
ஆற்றலால்
மாற்றமுடியாதது
மூன்று... காண்க...
சர்வ சிருஷ்டி
கர்த்தா
கர்த்தரை
எந்த சக்தியாலும்
எதுவும் செய்ய
இயலாதுதானே...
காலத்தைக் கடந்து
நிற்பவர்
கர்த்தர் ஒருவரே...
இரண்டாவதாக
கர்த்தரால்
வார்த்தையால்
படைக்கப்பட்டவை
வான்...
வான்வழிமண்டலம்
சூரியன், சந்திரன்.
சூரியனை எடுத்து
பூமியிலோ
பூமியை எடுத்து
சூரியனிலோ
வைக்க இயலுமா...
மூன்றாவதாக
காலம்...

காத்து இருக்காது
கடந்து போகும்
விஞ்ஞானிகளால்
ஒரு நிமிடம்
முன்னாடியோ
ஒரு நிமிடம்
பின்னாடியோ
கூட்டவோ
குறைக்கவோ
இயலுமா...
உலகப்பிரகாரமான
அனைத்து வசதியும்
ஆடம்பரமும்
இருக்கலாம்
அனுபவிக்கலாம்.
ஆனால்
மன சமாதானம்
இல்லையேல்
யாவும் வீண்தானே...
மாயையால் வரும்
மன மகிழ்ச்சி கூட
நிலைக்காது
நிரந்தரமாகாது.
ஆண்டவர் இயேசு
நமக்கு
சமாதானத்தை
தந்து போகிறார்.
கடவுளின்
கருணையைப்
பாருங்கள்.
மனிதரை
நேசிப்பதைப்
பாருங்கள்.
இயேசுவின் நாமம்
இரட்சிக்கும்,

இதயத்தைக்
கலங்கவிடாது
பயம் அணுகாது.
அன்பரே...
மாற்ற முடியாதது
மூன்று...
மாற்றக்கூடியது
ஒன்று
யாரை...
மனிதரை... எப்படி...
வழி தவறி நடந்து
பழிச் சொல்லுக்கு
ஆளானவரை,
முரண்டு பிடித்து
அரண்டு பிடிப்போரை,
புறம்பேசி பொழுதைக்
கழிப்போரை..
இவர்களை...
மாற்றலாம் தானே...
ஒருதடவை
இவர்கள்
இயேசுவின் அண்டை
வந்துவிடும்போது.
மனம்
மாறுதல் அடையும்,
இரட்சிப்பு
வந்து சேரும்,
அன்பு இதயத்தை
ஆட்சி செய்யும்.
கடந்த கால
வினைகள் போய்
நிகழ்காலம்
நிம்மதி தரும்.
இயேசுவின் அருள்
பரம் தரும் வரம்.

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# கிறிஸ்துவே நம்மில் உயர்த்தப்படட்டும்

விசுவாச வீரரான ஜார்ஜ் முல்லரிடம் ஒருமுறை வாலிபன் ஒருவன் சென்று, உங்கள் ஊழிய வெற்றிக்குக் காரணம் என்ன? என்று கேட்டான். அதற்கு அவர், கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டேன். என் சுயம் மரித்தது என்றார். அப்போது அந்த வாலிபன் சுயம் மரிப்பது என்றால் என்ன? என்று கேட்டான். அதற்கு அவர், தம்பி நீ கல்லறைக்குப் போய் அங்கே எழுதப்பட்டிருக்கும் மரித்தவர்களின் பெயரை வாசித்து, அவர்களை உன் மனம் போல வாய்க்கு வந்தபடியெல்லாம் பழித்துப் பேசு, பிறகு கொஞ்ச நேரம் கழித்து அவர்களின் பெயர்களைச் சொல்லி புகழ்ந்து பேசு. பிறகு என்னிடம் வா என்று சொல்லி அனுப்பினார். அப்படியே இந்த வாலிபன் கல்லறைக்குச் சென்று அவர்களை பழித்தும் புகழ்ந்தும் பேசிவிட்டு திரும்பி வந்தான். முல்லர் கேட்டார், "நீ கடினமாய் பேசினபோது, உன் மேல் சீறினார்களா?" என்றார். இல்லை ஒரு பதிலும் பேசவில்லை என்றான். "நீ புகழ்ந்த போது பெருமையடைந்து உன்னை பாராட்டினார்களா" என்றார். இல்லை ஒன்றும் பேசவில்லை என்றான். சுயம் மரித்தல் என்பது அதுதான். மற்றவர்களுடைய புகழுரை நம்மை பெருமையடையவும் செய்யக் கூடாது, கடுஞ்சொற்கள் நம்மைப் பாதிக்கவும் கூடாது. இந்த மனநிலையை சிலுவையில் தம் ஜீவனைத் தந்த கிறிஸ்துவின் உதவியோடு பெற்றுக் கொள்வது தான் சுயம் மரித்தல் என்று முல்லர் கூறினார். கிறிஸ்தவ வாழ்க்கை என்பது சுயம் நம்மை விட்டு நீங்கி, கிறிஸ்து நமக்குள் வாழ்கிற அனுபவம் ஆகும். நம்மில் பலர் குடும்பத்தில், சமுதாயத்தில், வேலைபார்க்கும் இடத்தில் நமக்குத் தர வேண்டிய முக்கியத்துவமும் மரியாதையும் சற்று குறைந்து விட்டால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. நம்முடைய நற்செயல்கள் கண்டு கொள்ளாமல் போகும் போதும், நம்முடைய ஆலோசனை ஏற்று கொள்ளப்படாமற்போகும் போதும் நாம் அதிகமாய் சோர்ந்து விடுகிறோம். அதுபோல நாம் பாராட்டப்படும் போதும் நான் என்ற எண்ணம் மேலோங்கி பெருமை தலை தூக்காத வண்ணம் கிறிஸ்துவே மகிமைப்படும் படிக்கு, அவருக்கு நன்றிகளைச் செலுத்தி அவரை உயத்த வேண்டும். "அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்." - யோவான் 3:30 ஆம், கிறிஸ்து ஒருவரே பாராட்டும் மனிதராக நாம் வாழ விரும்புவோம். கிறிஸ்துவே நம்மில் உயர்த்தப்படட்டும். அவர் ஒருவரே எல்லா கனத்திற்கும், மகிமைக்கும், புகழ்ச்சிக்கும் உரியவர்.

சுயம் என்னில் சாம்பலாய் மாற, சுத்தாவியே அனல் மூட்டும்
ஜெயம் பெற்று மாமிசம் மாய, தேவா அருள் செய்குவீர்!
கல்வாரியின் அன்பினையே கண்டு விரைந்தோடி வந்தேன்
கழுவும் உம் திரு இரத்தத்தாலே கறை நீங்க இருதயத்தை.

இனிதா மோசஸ்

# ஆராதனை பாடல்கள் - நவம்பர் 2015

## பாமாலை - கீர்த்தனை

ஆராதனை ஆரம்ப பாடல் : பாமாலை 17 கவி 1 மகா அதிசயங்களை

ஆராதனை இறுதி பாடல் : பாமாலை 205 கவி 1 எல்லா நன்மைக்கும்

### 06-11-2015

| | | |
|---|---|---|
| பாமாலை | 3 | ஆ கர்த்தாவே தாழ்மையாக |
| பாமாலை | 131 | பாதை காட்டும் |
| கீர்த்தனை | 164 | தந்தேன் என்னை இயேசுவே |
| கீர்த்தனை | 133 | தெய்வன்பின் வெள்ளமே |
| கீர்த்தனை | 17 | தோத்திரம் செய்வேனே |

### 13-11-2015

| | | |
|---|---|---|
| பாமாலை | 1 | அநாதியான கர்த்தரே |
| கீர்த்தனை | 109 | பாதகன் என் வினைதீர் ஐயா |
| பாமாலை | 90 | தெய்வாவீ மனவாசராய் |
| கீர்த்தனை | 7 | எந்நாளுமே துதிப்பாய் |
| கீர்த்தனை | 161 | என்னை ஜீவபலியாய் |
| கீர்த்தனை | 124 | துங்கனில் ஒதுங்குவோன் |

### 20-11-2015

| | | |
|---|---|---|
| பாமாலை | 42 | மா மாட்சி கர்த்தர் |
| பாமாலை | 4 | ஆத்மமே உன் ஆண்டவரின் |
| கீர்த்தனை | 172 | சுந்தரப் பரம தேவ |
| கீர்த்தனை | 173 | தந்தானைத் துதிப்போமே |
| கீர்த்தனை | 174 | தாசரே இத்தரணியை அன்பாய் |
| பாமாலை | 201 | சத்திய வேதமான விதை |

### 27-11-2015

| | | |
|---|---|---|
| பாமாலை | 44 | இயேசுவே உம்மைத் தியானித்தால் |
| பாமாலை | 199 | இயேசுவை நம்பி |
| கீர்த்தனை | 75 | சாலேமின் ராசா |
| கீர்த்தனை | 77 | வரவேணும் எனதரசே |
| கீர்த்தனை | 76 | மேகமீதில் இயேசுராஜன் |

# திருச்சபை ஜெபநாள் 01-11-2015 (முதல் ஞாயிறு)

"என் நீதியின் தேவனே, நான் கூப்பிடுகையில் எனக்குச் செவிகொடும்...."
சங்கீதம் 4:1

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- இம்மட்டும் நம்மைப் பாதுகாத்து, பராமரித்து இப்புதிய மாதத்தைக் காணச்செய்த தேவனுக்கு நன்றி ஏறெடுப்போம். கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக அவரைத் துதிப்போம்.
- திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- Youth Fellowship, Junior Church Special ஆராதனைகள் மற்றும் இராஸ் அல் கைமா கிளைச்சபையின் ஸ்தோத்திரப் பண்டிகை ஆராதனை ஆசீர்வாதமாக நடந்தேற கர்த்தர் பாராட்டின தயவுகளுக்காக அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
